# திருப்பூர் மாநகராட்சி

## 2018 ஆகஸ்டு மாதம் 23–ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

## 301 முதல் 308 மற்றும் 308(அ)

## 309 முதல் 317 வரை

## திருப்பூர் மாநகராட்சி

**2018ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு . ஜி.ரவி, பி.இ., எம்.பி.ஏ.,**
**மாநகரப் பொறியர் மற்றும்**
**ஆணையர் (பொறுப்பு),**
**திருப்பூர் மாநகராட்சி.**

*****

**301)** திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சியில் 2002ம் வருடத்திய பல்லுயிர் பன்மியச் சட்டம் (மத்திய சட்டம்) 2004ம் வருடத்திய பல்லுயிர் பன்மிய விதிகள் ஆகியவற்றில் தொகுத்தளிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்க திருப்பூர் மாநகராட்சியில் தனித்துவமிக்க தாவரங்கள் மற்றும் பல்லுயிர் பன்மிய மேலாண்மைக் குழு தோற்றுவிக்கப்பட்டமைக்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு சி.சிவராமன், ராயல் கிளாசிக் மில்ஸ் பிரைவேட் லிமிடெட், மங்கலம் ரோடு, திருப்பூர் | .. | உறுப்பினர் |
| 2) | திரு. ராஜா எம்.சண்முகம், டி.இ.எ., அப்பாச்சி நகர், திருப்பூர். | .. | உறுப்பினர் |
| 3) | திருமதி. லட்சுமி, கருமாரம்பாளையம், திருப்பூர் | .. | உறுப்பினர் |
| 4) | திருமதி. சரஸ்வதி, குமார் நகர், திருப்பூர் | .. | உறுப்பினர் |
| 5) | திரு. சண்முகராஜா, இன்ஜினியர், பில்டர்ஸ் அசோசியேசன்ஸ் ஆப் இந்தியா, திருப்பூர். | .. | உறுப்பினர் |
| 6) | திரு எம்.ஆர்.நவநீதகுமார், சக்தி இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன்ஸ், திருப்பூர் | .. | உறுப்பினர் |

**அலுவலகக் குறிப்பு : அனுமதி வழங்கலாம். ( இ.1 / 4152 / 2018)**

– – – – –

### தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**302)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.2, வார்டு எண்.17 கூத்தம்பாளையம் பிரிவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் AMRUT திட்டத்தின் கீழ் ஐந்து இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தொட்டி கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தொட்டி கட்டும் இடத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி ஒன்று பழுதடைந்த நிலையிலும் மற்றும் LP068 என்ற பொது விநியோக கடையும் உள்ளது. பொது விநியோகக் கடையினை இடமாற்றம் செய்ய நெருப்பெரிச்சல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்திற்கு 16.07.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த மேல்நிலைத் தொட்டி மற்றும் பொது விநியோகக் கடையினை இடித்து அப்புறப்படுத்திய பின்பு தான் மேல்நிலைத் தொட்டி கட்ட இயலும். எனவே பழுதடைந்த தொட்டி மற்றும் பொது விநியோகக் கடையினை இடித்து அப்புறப்படுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. பணியின் அவசர அவசியம் கருதி பழுதடைந்த நிலையில் உள்ள மேல்நிலைத் தொட்டி மற்றும் பொது விநியோகக் கடையினை இடித்து அப்புறப்படுத்த மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
(இ.1 / 5577 / 2017 )

– – – – –

### தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**303)** அரசாணை (எம்.எஸ்) எண்: 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, நாள்: 19.07.2018 –ம் தேதிய அரசாணையில் மாநகராட்சிகள், நகராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் 01.04.2018 முதல் கீழ்கண்டவாறு சொத்துவரி திருத்தம் மேற்கொள்ள ஆணையிடப்பட்டது.

1) சொந்தக் குடியிருப்பு கட்டிடங்களுக்கு .. 50% மிகாமலும்
2) வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு .. 100% மிகாமலும்
3) குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு .. 100% மிகாமலும்

சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென உத்திரவிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து வரப்பெற்ற 26.07.2018ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA IV) துறை, அரசாணை (எம்.எஸ்) எண்: 76–ல் மாநகராட்சிகள், நகராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் 01.04.2018 முதல் கீழ்கண்டவாறு,

1) சொந்தக் குடியிருப்பு கட்டிடங்களுக்கு .. 50% மிகாமலும்
2) வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு .. 50% மிகாமலும்
3) குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு .. 100% மிகாமலும்

சொத்துவரி உயர்வினை மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

எனவே மேற்படி அரசாணை எண்.73 மற்றும் 76 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

பதிவு செய்யலாம். ( அ.1 / 5175 / 2018)

– – – – –

## தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

– – – – –

**304)** திருப்பூர் மாநகராட்சி SMART CITY Ltd., மூலம் தேர்வு செய்யப்பட்ட ABD பகுதிகளான வார்டு எண்.45–ல் முத்துப்புதூர் மாநகராட்சி பள்ளியின் நுழைவாயில், பழைய பேருந்து நிலைய நுழைவாயிலினை ஒட்டி மேற்கண்ட பள்ளி நுழைவுவாயில் அமைந்துள்ளது. மேற்கண்ட பள்ளி நுழைவு வாயிலை வேறு இடம் மாற்றி அமைக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் பள்ளி நுழைவாயில் பேருந்து நிலைய நுழைவு வாயில் அருகில் உள்ளதால் பள்ளி வளாகம் அருகே பேருந்துகள் விரைந்து செல்வதால் தற்போதுள்ள இடம் குழந்தைகளுக்கு பாதுகாப்பானதாக இல்லை. ஆகவே பள்ளி வளாகத்தினை வேறு இடத்திற்கோ, பள்ளி குழந்தைகளை வேறு பள்ளிக்கோ மாற்றி அமைக்க கல்வித்துறையில் ஒப்புதல் பெறவும், பள்ளி வளாகத்தினுள் புதிதாக Multi Level Car Parking ( MLCP) SMART CITY நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (இ.1 / 6630 / V / 2017 )

– – – – –

## தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்பட்டது.

– – – – –

**305)** திருப்பூர் மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் Digital Payment சம்மந்தமாக போக்குவரத்துத் துறை, மின்சார வாரியத் துறை, வங்கித் துறை, விமான போக்குவரத்துத் துறை, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, தொலை தொடர்புத் துறை, தபால் துறை, ரெயில்வே துறை, வீட்டுவசதித் துறை ஆகியவற்றிலிருந்து புள்ளி விபரங்களை பெற்று கணிணியில் பதிவு செய்ய ஒருவரை மாதம் ரூ.50,000/– மற்றும் ஊர்தி படிகள் ரூ.6,000/– என்ற அடிப்படையில் ஸ்மார்ட் சிட்டி பணி முடியும் வரை ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நியமித்துக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதி வழங்கலாம். (இ.1 / 3620 / 2017)

– – – – –

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**306)** “Resolved to authorize Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation ( TUFIDCO), the State Mission Directorate for Smart Cities Mission for implemention of Integrated Command and Control Centre in Tiruppur Smart City as per the Government of India guidelines”.

**Office Note : Subject may be approved. ( E.1 / 6630 / (XI) / 2017 )**

- - - - -

**Resolution : OFFICE NOTE APPROVED.**

–– – – –

**307)** திருப்பூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு, மத்திய அரசின் அம்ரூத் 2017–20 திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது. மேற்படி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான 4 சிப்பம் பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வெளியிடப்பட்டதில், அகில இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழில் மற்றும் மாநில அளவில் ஒரு தமிழ் நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.22,30,352/–ஐ வழங்க கோரி மேற்படி ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை விளம்பரம் செய்த திருவாளர்கள் Bright Advertising நிறுவனம் பட்டியல் ( Bill No. 4816 BR 4817/CHE-17, Dated 03/08/2018) சமர்ப்பித்துள்ளனர். மேற்படி விளம்பர செலவினத்தை பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து வழங்க ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி விளம்பர செலவினம் மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம். (இ.1 / 4813 / 2017)

– – – – –

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

– – – – –

**308)** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் **14.08.2018**ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் தற்போதுள்ள குடிநீர் விநியோக முறையினை எளிமைப்படுத்தவும், முறையான சீரான குடிநீர் விநியோகத்தை உறுதிப்படுத்தவும், குடிநீர் விநியோகம் சேதம் ஏற்படுவதை **15** சதவிகிதத்திற்கு குறைவாக்கவும், District Metering Area (DMA zoning concept )-ஆக பிரித்து செயலாக்குவதற்கு விரிவான அறிக்கை தயாரிப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனத்தை ( M/s. TWIC, Chennai ) கலந்தாலோசகராக நியமிக்கலாம் என ஆலோசனை வழங்கப்பட்டது. அதன்படி திருப்பூர் மாநகராட்சி முழுவதிலும் குடிநீர் திட்ட பகிர்மானம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் விரிவாக ஆய்வு செய்து ஆய்வறிக்கை தயாரிக்க கலந்தாலோசகராக ( M/s. TWIC, Chennai) அவர்களை நியமிக்கவும், அதற்கான செலவினத் தொகையினை PPF / PGDF நிதியில் மான்யமாக வழங்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை கேட்டுக் கொள்ள மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம். **( இ.1 / 6897 / 2017)**

– – – – –

## தீர்மானம் : ஒப்புதல் அளிக்கப்பட்டது.

– – – – –

**308)அ)** திருப்பூர் மாநகராட்சியில் மத்திய அரசின் அம்ரூத் **2017–20** திட்டத்தின் கீழ் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, செயல்படுத்தப்படவுள்ள புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் (New Water Supply Scheme) தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட **5** பணிகளுக்கு, அகில இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழில் மற்றும் மாநில அளவில் ஒரு தமிழ் நாளிதழிலும் ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை விளம்பரம் செய்த வகையில் திருவாளர்கள் Bright Advertising நிறுவனம் பட்டியல்கள் சமர்ப்பித்துள்ளது.

| Sl.No. | Bill No. | Bill Amount | Deduction | Net Amount Rs. |
|---|---|---|---|---|
| 1. | 4818 BR 4819 / CHE – 17 | 20,27,592/- | 20,276/- | 20,07,316/- |
| 2. | 4814 BR 4815 / CHE - 17 | 14,86,900/- | 14,869/- | 14,72,031/- |
| 3. | 4873 BR 4874 / CHE - 17 | 14,86,900/- | 14,869/- | 14,72,031/- |
| விளம்பர நிறுவனத்திற்கு வழங்க வேண்டிய தொகை மொத்தம் | | | | **49,51, 378/–** |

மேற்படி பட்டியல் தொகை ரூ.**49,51,378/–**ஐ புதிய குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து வழங்க ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி விளம்பர செலவினம் மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பதிவு செய்யலாம். ( இ.1 / 4814 /2017 )

– – – – –

## தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

– – – – –

**309)** தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் **2018–19**ன் கீழ்நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.**12981/2018/இ3** நாள். **23/07/2018**ல் **100** பணிகளை ரூ.**3033.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் மாநகரில் பல்வேறு இடங்களில் சாலை பணிகளை மேற்கொள்ள அவற்றை ஒருங்கிணைத்து **6** சிப்பங்களாக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

**<u>309–ன் தொடர்ச்சி</u>**

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | 1,2,3,4, 5,6,7,8 | வார்டு எண்.1, கே.பி.எஸ். காலனி சாலையில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.1, வீரப்ப செட்டியார் சாலையில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.2, அம்பேத்கார் காலனி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.3, ஐஸ்வர்யா நகர் முதல் நாகாத்தம்மன் கோவில் வீதி வரை உள்ள பகுதியில் புதை மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.4, வேலன் நகர் மற்றும் அலமேலு நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.3, அங்கேரிபாளையம் மேற்கு, ஏ.வி.பி. ரோடு ஏ.டி. காலனி மற்றும் கட்டிட தொழிலாளர் காலனி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் கான்கிரீட் தளம் அமைத்தல், வார்டு எண்.4, கவிதா நகர் முதல் ப்ளாக் மாரியம்மன் கோவில் வரை மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.5, குபேரபுரி வீதி மற்றும் குறுக்கு வீதி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.5, சௌபாக்யா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.6, காவல் நிலையம் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.6, கருப்பராயன் கோவில் வீதி மற்றும் குப்பண்ண கவுண்டர் வீதி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.7, பாலு இன்னோவேசன் பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.7, அவினாசிகவுண்டம்பாளையம் பகுதியில் கான்கிரீட் தளம் மற்றும் சிறுபாலம் அமைத்தல், வார்டு எண்.7, மகாவிஷ்ணு நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.8, வெங்கடப்பகவுண்டர் லேஅவுட் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 500.60 |
| 2 | 10,11, 14,15, 16,17, 18,19, 23 | வார்டு எண்.10, கோவிந்தம்மாள் லேஅவுட் கிழக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.10, வ.ஊ.சி நகர் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.10, ஆசர் நகர் தாழம்பூ வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.10, ஆசர் நகர் செண்பகா வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.10, ஆசர் நகர் ரோஜா வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.10, ஆசர் நகர் குறிஞ்சி வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, லட்சுமி தியேட்டர் பிரதான சாலையில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, டி.என்.சேசன் (தென்வடல்) வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, இ.பி. காலனி (கிழமேல்) பள்ளி வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, இ.பி. காலனி (தென்வடல்) பள்ளி வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, அன்னை கார்டன் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, திருமலை நகர் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, திருமலை நகர் 3வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, சிவசக்தி | 483.40 |

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| | | காலனி மேற்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, சிவசக்தி காலனி கிழக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.11, சிவசக்தி காலனி குறுக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.14, திரு ஆவினன் குடி நகர் 1வது, 2வது மற்றும் 3வது வீதிகளில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.14, பழனி ஆண்டவர் நகர் 1வது மற்றும் 2வது வீதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.14, காவிரி நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.15, மூகாம்பிகை நகர் பிரதான சாலையில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.15, மூகாம்பிகை நகர் மேற்கு 1வது வீதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.15, மூகாம்பிகை நகர் மேற்கு 1வது மற்றும் 2வது குறுக்கு வீதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.16, பாண்டின் நகர் பிரதான சாலை, சௌடாம்பிகை நகர், கலைவாணர் வீதி, தயானந்தர் வீதி மற்றும் மாரியம்மன் கோவில் வீதி பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.17, அண்ணா நகர் மற்றும் பண்ணாரியம்மன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.18, குருவாயூரப்பன் நகர் பகுதியில் சாலையை அகலப்படுத்தி மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.19, திரு நகர் பிரதான சாலை (கிழமேல்), பிரதான சாலை (தென்வடல்), திரு நகர் 1வது, 2வது மற்றும் 3வது வீதி பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.23, பகவான் நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.16, கே.ஜி. தோட்டம் மற்றும் என்.ஆர்.கே புரம் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல் | |
| 3 | 20,21, 22,24, 28,29, 30,33 | வார்டு எண்.20, கஞ்சம்பாளையம் சாலையில் (போயம்பாளையம் பிரதான சாலை முதல் நல்லாறு ஓடை வரை) மழைநீர் வடிகால் கட்டுதல் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.21, அறிவொளி நகர் பிரிவு கஞ்சம்பாளையம் சந்திப்பு முதல் நல்லாறு ஓடை வரை மழைநீர் வடிகால் (Disposal) கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.22, மூர்த்தி நகர் கிழக்கு விரிவு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல் வார்டு எண்.24, பிரிட்ஜ்வே காலனி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் சிட்கோ முதல் பிரிட்ஜ்வே காலனி இரட்டை கண் பாலம் வரை மழைநீர் வடிகால் (Disposal) கட்டுதல், வார்டு எண்.28, பாரதி நகர் வடக்கு 1வது மற்றும் 2வது வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.29, லட்சுமி நகர் பிரதான சாலை, 1வது, 2வது வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.30, கேத்தம்பாளையம் நல்லாறு வீதி, சபரி வீதி மற்றும் சுப்பையா வீதி பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.33ல் பாரதிதாசன் நகர் பகுதி, கொளக்காடு தோட்டம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல் மற்றும் சொட்டன்களர் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல் | 489.00 |

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 4 | 34,35, 39,40, 41 | வார்டு எண்.34, வி.ஜி.வி. கார்டன் பிரதான சாலையில் தார்தளம் புதுப்பித்தல்வார்டு எண்.34, வி.ஜி.வி. கார்டன் விரிவு 17வது, 29வது, 30வது, 31வது, 32வது, 33வது, 34வது மற்றும் 35வது வீதிகளில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.35, மருதப்பா நகர் 1வது மற்றும் 2வது வீதியில் புதிதாக தார்தளம் அமைத்தல் மற்றும் யாசின்பாபு நகர் பிரதான சாலை முதல் குருவம்பாளையம் வரை தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.39, சத்தியமூர்த்தி நகர் 1வது வீதி, 2வது வீதி, 1வது குறுக்கு வீதி மற்றும் தென்வடல் சாலையில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.39, ஜெய்நகர் கிழக்கு பிரதான சாலையில் தார்தளம் மற்றும் கான்கீரிட் தளம் அமைத்தல், வார்டு எண்.40, கே.என்.பி. சுப்பிரமணியம் நகர் 6வது, 7வது மற்றும் 8வது வீதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.40, காங்கயம் நகர் 1வது, 2வது மற்றும் 3வது குறுக்கு வீதிகளில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.40, பத்மினி கார்டன் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.41, அப்பாச்சி லேஅவுட் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.41, எல்லோரா கார்டன் பகுதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.41, பி.ஏ.பி. நகர் மற்றும் செரங்காடு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.41, சங்கர் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல் | 555.00 |
| 5 | 12,13, 44,46, 47,48, 49,51, 56 | வார்டு எண்.12, அண்ணா வீதி, எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.12, மகாசக்தி நகர் பிரதான சாலையில் தார்தளம் அமைத்தல்வார்டு எண்.13, கிருஷ்ணா நகர் மற்றும் சாரதா நகர் பகுதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.44, சொர்ணபுரி லேஅவுட் மற்றும் கோம்பைத் தோட்டம் பகுதியில் தார்தளம் புதுப்பித்தல், வார்டு எண்.46, பெத்திசெட்டிபுரம் 1வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல் வார்டு எண்.46, பெத்திசெட்டிபுரம் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.46, பெத்திசெட்டிபுரம் 3வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.47, ஸ்டேன்ஸ் ரோடு 1வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.47, ஸ்டேன்ஸ் ரோடு 4வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.47, முத்துச்சாமி 1வது குறுக்கு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.47, காலேஜ் ரோடு 3வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.48, நேரு வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.48, சின்னான் நகர் பிரதான சாலையில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.49, கருவம்பாளையம் 1வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.49, கருவம்பாளையம் 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.49, ஆரம்பப்பள்ளி 1வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.49, ஆரம்பப்பள்ளி 2வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.49, தெற்குதோட்டம் 6வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.49, ஈஸ்வரமூர்த்தி லேஅவுட் 1வது மற்றும் 2வது வீதியில் | 507.10 |

| வ. எண் | வார்டு எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| | | மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.49, ஈஸ்வரமூர்த்தி லேஅவுட் 3வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.49, கிரி நகர் 1வது வீதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.51, எல்லையம்மன் கோவில் வீதி மற்றும் மாகாளியம்மன் கோவில் வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.51, பெரிச்சிபாளையம் தெற்கு வீதி மற்றும் பெரிச்சிபாளையம் வடக்கு 4வது வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.56, ஜெகநாதன் லே அவுட், குமரன் அவென்யூ, மங்கலம் ரோடு பிள்ளையார் கோவில் 1வது மற்றும் 2வது குறுக்கு வீதிகள், வள்ளியப்பா லேஅவுட் 1வது மற்றும் 2வது வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.56, ஆலாங்காடு 7வது மற்றும் 8வது வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.56, வெங்கடாச்சலபுரம் 1வது மற்றும் 3வது வீதிகளில் மறுதார்தளம் அமைத்தல் | |
| 6 | 36,37, 52,53, 54,55, 57,58, 59,60 | வார்டு எண்.36, மருதமலை ஆண்டவர் நகர் பிரதான சாலை மற்றும் 1 முதல் 6 குறுக்கு வீதிகளில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.37, கண்ணன் நகர் 1வது மற்றும் 2வது வீதியில் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.37, சதாசிவம் நகர் 3வது வீதி, 1வது குறுக்கு வீதி மற்றும் 2வது குறுக்கு வீதி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் தார்தளம் அமைத்தல், வார்டு எண்.37, அழகாபுரி நகர் பிரிவு முதல் மகாலட்சுமி நகர் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் தார் சாலையை அகலப்படுத்தி புதுப்பித்தல், வார்டு எண்.52, வள்ளலார் நகர் சந்திப்பு முதல் காளிகுமாரசாமி கோவில் வரை மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.53, முத்து நகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.54, சுண்டமேடு மெயின் ரோடு முதல் காட்டுநாயக்கர் வீதி வரை மற்றும் பிள்ளையார் கோவில் வீதி பகுதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.55, சுண்டமேடு அம்பேத்கார் நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல், வார்டு எண்.57, 58 மற்றும் 59, சூரியா கிருஷ்ணா நகர் முதல் கார்த்திக் நகர் பிரதான சாலை வரை மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் கார்த்திக் நகர் முதல் பாரப்பாளையம் பிரதான சாலை வழியாக ஆண்டிபாளையம் நிலமட்டத் தொட்டி வரை மழைநீர் வடிகால் கட்டுதல், வார்டு எண்.60, குளத்துப்புதூர் பிரதான சாலை பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் மறுதார்தளம் அமைத்தல் மற்றும் வார்டு எண்.60, ராஜகணபதி நகர் பகுதியில் மறுதார்தளம் அமைத்தல் | 497.90 |
| | | **மொத்தம்** | **3033.00** |

திருப்பூர் மாநகராட்சியின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு மேற்கண்ட 100 சாலைப்பணிகளை 6 சிப்பங்களாக மொத்தம் ரூ.30.33 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2018–19ன் கீழ் செய்ய தொழில் நுட்ப அனுமதி வேண்டி தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். **( E1 / 2620 / 2018)** `

\- - - - - -

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**310)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 22866/P3/2018/, நாள் **23.08.2018** திடக்கழிவு மேலாண்மை தலைப்பின் கீழ் **2018–19** ஆம் ஆண்டின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | வேலையின் மதிப்பு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | 2 | ஆத்துப்பாளையம் பிரதான சாலை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 2. | 5 | ஆத்துப்பாளையம் மின்மயானம் பின்புறம் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 3. | 20 | கஞ்சம்பாளையம் பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 4. | 21 | ஜி.எம். நகர் பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 5. | 30 | முனியப்பன் கோவில் வீதி, கேத்தம்பாளையம் பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 6. | 30 | கருமாரம்பாளையம், மணியகாரம்பாளையம் மேற்கு பிராதன சாலை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண்உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 7. | 35 | புதுப்பாளையம் பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 8. | 36 | கோவில் வழி பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 9. | 38 | எம்.ஆர்.ஜி நகர் பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 10. | 44 | செல்லாண்டியம்மன் துறை, வளம் சாலை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 11. | 46 | ஸ்டேட் பேங்க் காலனி, ராயபுரம் பிரதான சாலை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 12. | 50 | கல்லிக்காடு தோட்டம், சந்தைப்பேட்டை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 13. | 51 | பெரிச்சிபாளையம், திரு.வி.கா நகர் பிரதான சாலை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 14. | 52 | கருப்பகவுண்டம்பாளையம், கல்லாங்காடு பிரதான சாலை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 15. | 54 | சுண்டமேடு, குப்பாண்டம்பாளையம் பிரதான சாலை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |
| 16. | 59 | சின்னாண்டிபாளையம், மங்கலம் பிரதான சாலை பகுதியில் 5-TPD கொள்திறன் கொண்ட நுண் உரக்கிடங்கு (Micro Composite Centre) அமைத்தல். | 70.00 |

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | வேலையின் மதிப்பு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|
| 17. | - | இலகுரக வாகனங்கள் (LMV) – 32 எண்ணிக்கை | 179.20 |
| 18. | - | பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் (BOV) – 112 எண்ணிக்கை | 201.60 |
| | | **மொத்தம்** | **1500.80** |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பதிவு செய்யலாம். ( **E1 / 4161 / 2018** )`

\- - - - - -

## தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.

– – – – –

**311)** திருப்பூர் மாநகராட்சி பகுதியில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இத்திட்டத்தின் பகுதி சார்ந்த அபிவிருத்தி பணிகளின் ( ABD area) கீழ் கன்வென்சன் சென்டர் (Convention Centre) அமைக்கும் பணிக்கு 28–06–2018ம் தேதியன்று டுபிட்கோ, சென்னை அலுவலகத்தில், தலைவர், திருப்பூர் மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் அவர்களால் ரூ.65.77 கோடிக்கு நிர்வாக அனுமதி பெரும் பொருட்டு பொருள் எண்.03.04ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தலைவர், திருப்பூர் ஸ்மார்ட் சிட்டி லிமிடெட் அவர்களால் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட பொருளினை (HPPSC) உயர்மட்ட தீர்மான குழுவினரால் 06.07.2018ம் தேதியன்று நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி வேண்டி தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெற மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ.1 / 6630 / (VII) / 2018)

– – – ––

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**312)** திருப்பூர் மாநகராட்சி, நகராட்சியாக இருந்த பொழுது புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினரால் தயார் செய்யப்பட்டது. தற்போது மாநகராட்சி 25–10–2011 முதல் 2 மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் 8 ஊராட்சி பகுதிகளுடன் இணைக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

270 மில்லியன் லிட்டர் கொள்ளளவிற்கு புதிய குடிநீர் ஆதாரத்தை மேட்டுப்பாளையம் பவானி ஆற்றங்கரையில் உருவாக்கவும், புதிய நீரேற்று நிலையம் அமைத்தல், 19.47 கி.மீ. நீளத்திற்கு சுத்திகரிக்கப்படாத நீர் உந்து குழாய்கள் பதித்தல், அன்னூருக்கு அருகில் குருக்கிலியம்பாளையம் கிராமத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 6 ஏக்கர் தனியார் நிலமும், அணுகுபாதைக்காக மேட்டுப்பாளையம் சாலையில் இருந்து 300 மீ. நீளம் மற்றும் 9 மீ அகலம் கொண்ட நிலமும் தேவைப்படுகிறது. 196 / 270 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், 148.31 கி.மீ. நீளத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட நீருந்து குழாய்கள் பதித்தல் 29 இடங்களில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுதல் மற்றும் 1062.43 கி.மீ. குடிநீர் விநியோக குழாய்கள் பதித்தல் போன்ற பணிகளை வடிவமைத்து ரூ.992.94 கோடி மதிப்பில் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 24.09.2018ல் 26.09.2018 மற்றும் 28.09.2018ல் கோரப்பட்டுள்ளது.

**312–ன் தொடர்ச்சி**

திருப்பூர் **"டி எக்ஸ்போர்ட் அசோசியேசன்ஸ்"** நிறுவனம் மூலமாக அணுகுபாதையினை தானமாக பெறும் வகையில் பத்திரம் பதிவு செய்ய நடவடிக்கையில் உள்ளது. மேலும் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க 6 ஏக்கர் நிலம் கிரயம் பெற மாநகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால் அரசின் நிதியிலிருந்து மான்யமாக வழங்க கோரியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் விலைக்கு வாங்க அனுமதி வேண்டியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ.1 / 4453 / 2018)

– – – – –

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**313)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் 01.12.2017ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 22.11.2017ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம்.அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு 30.11.2017ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே 01.09.2018 முதல் 30.09.2018 வரை மாநகரில் குடிநீர் விநியோகம் லாரிகள் மூலம் செய்ய ஒரு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.16.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ.1 / 6112 / 2017 )

– – – – –

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – – ––

**314)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவிலுள்ள வாகனங்களை இயக்குவதற்கு வெளிச்சந்தை முறையில் ஒரு வருடத்துக்கு 09 கனரக வாகன ஓட்டுநர்கள் மற்றும் 35 இலகுரக வாகன ஓட்டுனர்கள் ( Outsourcing of manpower ( drivers) for operate the Solid Waste Management Vehicles) வழங்கும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.80.00 இலட்சத்துக்கு நிர்வாக அனுமதி பெற்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. 20.08.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை |
|---|---|---|
| 1. | திருவாளர்கள். அமிர்தா எஜுகேசனல் அன்ட் சேரிடபிள் டிரஸ்ட், திருப்பூர் | செலுத்தியுள்ளனர் |
| 2. | திருவாளர்கள்.ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட், சென்னை | செலுத்தியுள்ளனர் |

<u>**314–ன் தொடர்ச்சி**</u>

மேற்காண் நிறுவனங்களின் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வுக்குழு ஆய்வு செய்து, இந்த இரு நிறுவனங்களும் உரிய தகுதிகளுடன் உள்ளதால் இந்நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வுக்குழு **20.08.2018**ல் ஏற்றுக் கொண்டுள்ளது. இவ்வகையில் இந்த இரு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் ( Price Bid) **23.08.2018** அன்று திறக்கப்பட்டன. அதன்விபரம் வருமாறு.

| வ. எண். | விபரம் | திருவாளர்கள் அமிர்தா எஜுகேசனல் அன்ட் சேரிடபிள் டிரஸ்ட், திருப்பூர் | திருவாளர்கள் ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட், சென்னை |
|---|---|---|---|
| | | விலைவிகிதம் ஒரு ஓட்டுநருக்கு நாள் ஒன்றுக்கு | விலைவிகிதம் ஒரு ஓட்டுநருக்கு நாள் ஒன்றுக்கு |
| 1. | கனரக வாகன ஓட்டுநர் | ரூ.512.00 | ரூ.520.00 |
| 2. | இலகுரக வாகன ஓட்டுநர் | ரூ.467.00 | ரூ.475.00 |

ஒப்புநோக்குப் பட்டியல்படி மேற்கண்ட 2 நிறுவனங்களில் திருவாளர்கள் "அமிர்தா எஜுகேசனல் அன்ட் சேரிடபிள் டிரஸ்ட் ", திருப்பூர் நிறுவனத்தார் வழங்கியுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளித் தொகை, கனரக வாகன ஓட்டுநர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு **ரூ.512.00** மற்றும் இலகுரக வாகன ஓட்டுநர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு **ரூ.467.00** என்பது சந்தை நிலவரப்படி உள்ளதால் இதனை ஏற்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வுக்குழு **23.08.2018**ல் தீர்மானித்துள்ளது. இவ்வகையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்காண் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். ( எச்.1 / 3192 / 2018)

– – – – –

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**315)** திருப்பூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் தெருக்களில், குப்பை கொட்டுமிடங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களில் தெளிப்பதற்கு பிளீச்சிங் பவுடர் ஒரு வருட காலத்துக்கு 90 மெட்ரிக் டன்கள் தேவைப்படுகின்றன. இவற்றை கொள்முதல் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.21.00 இலட்சத்திற்கு மாமன்றத் தீர்மானம் எண். 282, நாள் 22.05.2018 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டது. அதன்படி 20.08.2018 அன்று கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | திருவாளர்கள்.வினோத் கலர் கெம், திருப்பூர் | 33,29,100/– | செலுத்தியுள்ளனர். |
| 2. | திருவாளர்கள். பவித்ரா டை கெம், திருப்பூர் | 34,20,000/– | செலுத்தியுள்ளனர். |

ஒப்புநோக்குப் பட்டியல்படி மேற்கண்ட இரண்டு நிறுவனங்களில் திருவாளர்கள். வினோத் கலர் கெம், திருப்பூர், நிறுவனத்தார் வழங்கியுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பு **ரூ.33,29,100/–** என்பது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் கடித எண். F.Approval –Bleaching – DO-II / ETKC/Ede-2017 date: 26.03.2018ல் **2017–18**க்கான தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்தின்படி **2.25%** குறைவாக உள்ளதால் இதனை ஏற்பதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வுக்குழு **20.08.2018**

**315–ன் தொடர்ச்சி**

அன்று தீர்மானித்துள்ளது. இவ்வகையில் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து கூடுதல் செலவினம் (33,29,100/– (–) 21,00,000/–) 12,29,100/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மேற்காண் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) கூடுதல் செலவினம் ரூ.12,29,100/–ஐ மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். (இ.5 / 3911 / 2018)

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

– – – – –

**316)** திருப்பூர் மாநகராட்சிக்கு திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் (Smart City) ரூ.386.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 எண்ணிக்கை பூங்காக்கள் அமைத்தல் பணிகளுக்கு 09.08.2018 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி 09.08.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகளை கூர்ந்தாய்வு செய்த ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழு மேற்படி 4 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் அளித்திருந்த அனைத்து ஒப்பந்தாரர்கள்/நிறுவனங்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதாக முடிவு செய்தது. அதனடிப்படையில் 10.08.2018 அன்று விலை விகித உறை திறப்பு செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளிலும் கூடுதல் விலை விகிதம் குறிப்பிடப்பட்டிருந்ததையடுத்து, ஒவ்வொரு பணிக்கும் முறையே குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்திருந்த ஒப்பந்ததாரருக்கு 10.08.2018 அன்று விலைக்குறைப்பு கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி ஒப்பந்தாரர்கள்/நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட விலைக்குறைப்புக் கடிதங்களின்படி மீண்டும் ஒப்புநோக்கு செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (மதிப்பீட்டு விலையை விட) | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு மற்றும் ஒப்பந்த விகிதம் (விலைக் குறைப்புக்குப்பின்) (மதிப்பீட்டு விலையை விட) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | 46 | ராயபுரம் ரவுண்டானா பகுதியில் பூங்கா அமைத்தல் **(மதிப்பீடு.ரூ.92.00 இலட்சம்)** | M/s.Encon Engineers | ரூ.74,58,250 /- 5.85% அதிகம். | ரூ.73,95,430/- 4.96% அதிகம். |
| | | | திரு.RVP.பாலமுருகன் | ரூ.75,98,940 /- 7.85% அதிகம். | ---- |
| 2. | 48 | புதுநகர் காலனி பகுதியில் பூங்கா அமைத்தல் **(மதிப்பீடு.ரூ.68.00 இலட்சம்)** | திரு.A.செந்தில்குமார் | ரூ.52,87,125 /- 6.10% அதிகம். | ரூ.52,30,515/- 4.96% அதிகம். |
| | | | M/s.ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | ரூ.54,96,275 /- 10.30% அதிகம். | ---- |
| 3. | 25 | ஜே.ஜி நகர் பகுதியில் பூங்கா அமைத்தல் **(மதிப்பீடு.ரூ.111.00 இலட்சம்)** | திரு.S.செல்வராஜ் | ரூ.91,87,260 /- 5.58% அதிகம். | ரூ.91,32,835/- 4.96% அதிகம். |
| | | | M/s.ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | ரூ.95,40,268 /- 9.64% அதிகம். | ---- |
| 4. | 46 | ராயபுரம் பகுதியில் கிருஷ்ணன் கோவில் அருகில் பூங்கா அமைத்தல் **(மதிப்பீடு.ரூ.115.00 இலட்சம்)** | திரு.A.செந்தில்குமார் | ரூ.94,80,640 /- 6.03% அதிகம். | ரூ.93,86,135/- 4.97% அதிகம். |
| | | | M/s.ஸ்ரீசாயி அசோசியேட்ஸ் | ரூ.98,64,280 /- 10.32% அதிகம். | ---- |

**316–ன் தொடர்ச்சி**

விலைக்குறைப்புக்குப் பின் மதிப்பீட்டு விலையை விட 5.00%-க்குள் அதிகமாக உள்ள கலம் எண்–6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக்கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மேற்படி பணிகள் திட்டப்பணியாக உள்ளதால் விரைவில் பணியை முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதாலும், திருப்பூர் மாநகரம் தொழில் நகரமாக உள்ளதால் திருப்பூர் மாநகரில் கட்டுமானப் பொருள்களின் விலை மற்றும் தொழிலாளர்கள் கூலி போன்றவை செந்தூரப்பட்டியல் விலை விகிதத்தை விட கூடுதலாகவும், மற்ற நகரங்களை காட்டிலும் கூடுதலாகவும் உள்ள காரணத்தாலும், விலைக்குறைப்புக்கு பின் மதிப்பீட்டு விலையை விட 5.00%-க்குள் அதிகமாக உள்ள கலம் எண்–6ல் கண்ட மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை மாமன்றம் ஏற்கலாம். **ம.எண். 39 / S / 2018-19**

– – – – –

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**317)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட சொத்துவரி விதிப்பிற்குட்பட்ட கட்டிடங்கள் மற்றும் காலியிடங்களுக்கு 01.04.2018 முதல் பொது வரி திருத்தம் செய்ய வரி விதிப்பாளர்களுக்கு வழங்க வேண்டிய சுய மதிப்பீட்டு படிவங்கள், சொத்துவரி கணக்கீட்டு படிவங்கள் மற்றும் விசேஷ அறிவிப்பு படிவங்கள் அச்சிட ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/– த்திற்கு மன்ற அனுமதியும், மேற்படி படிவங்களை அச்சிட்டு வழங்க ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) அனுமதி வழங்கலாம்.
2) அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

**( அ.1 / 5175 / 2017 )**

–––––

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

– – – – –

**(ஓம்) ஜி. ரவி**
**மாநகர பொறியர் மற்றும்**
**ஆணையர் (பொ),**
**திருப்பூர் மாநகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையருக்காக,**
**திருப்பூர் மாநகராட்சி.**